# திருக்குறள் சொல்லும் கம்பராமாயணப் பொருளும்

# Thirukkural and the Meaning of The Kamparamaayana

***முனைவர் ம.ஏ. கிருட்டினகுமார்***
*இணைப்பேராசிரியர்*
*காஞ்சிமாமுனிவர் அரசுப் பட்டமேற்படிப்பு மையம்*
*புதுச்சேரி*

**Dr. M.A. Krishnakumar**
*Associate Professor*
*Kanchima Munivar Government Post Graduate Centre*
*Pondicherry*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழர்களின் உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் உணர்த்துவதற்காகவே இலக்கியங்கள் தோன்றின. அவ்வரிசையில் முக்காலத்திற்கும் பொருத்தமான முப்பால் நூலான திருக்குறளும்; முத்தான கவியின்ப வரலாற்று நூலான கம்பராமாயணமும் தனித் திறத்தன. தமிழர்களின் பெருமையினைப் பறைசாற்றும் வகையில் இவ்விரண்டு நூல்களையும் எடுத்துரைப்பது தமிழர் மரபு. எனவே, இரண்டு நூல்களுக்கான ஒப்புமையே ஆய்வுக்குரிய பொருளாயின. "தெய்வப்புலவர்" திருவள்ளுவர் அருளிய திருக்குறள் சொற்களுக்கு, "கவிச்சக்கரவர்த்தி' கம்பரின் கம்பராமாயணம் பொருள் பகரும் நிலையில் இருப்பதனை அறிய விழைந்ததன் விளைவாகவே இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *திருக்குறள், கம்பராமாயணம், கம்பர், தெய்வப்புலவர், ஆள்வினை, ஊழ்வினை, கவிச்சக்கரவர்த்தி*

**Abstract**

*Literature sprang up to realize the tamil selves as their definite objects of religion, wealth, happiness, home, etc. In that order there is a thread of three cubits, according to the three times; Muthanakavi's biography, Kamparamaayanam, is also unique. It is the tradition of the Tamils to refer to these two books in a way that speaks volumes about the greatness of the Tamils. Therefore, the similarity between the two books became the subject of the study. This article is the result of the failure to know that 'Kavi Chakravarthy' Kambarin's Kambarin's Kambaramayanam is in a state of materialization to the words of 'Deiva Pulavar' Thiruvalluvar Aruliyathiru.*

***Keywords:*** *Munalarazhasanala: Thirukkural, Kambaramayanam, Kambar, Deiva Pulavar, Alvinai, Uzhvinai, Kavichakravarthy*

**Citation**

Krishnakumar, M. .. "Thirukkural and the Meaning of The Kamparamaayana." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 14–19.

DOI: *https://doi.org/10.5281/zenodo.20135843*

*தமிழர்களின் உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் உணர்த்துவதற்காகவே இலக்கியங்கள் தோன்றின. அவ்வரிசையில் முக்காலத்திற்கும் பொருத்தமான முப்பால் நூலான திருக்குறளும்; முத்தான கவியின்ப வரலாற்று நூலான கம்பராமாயணமும் தனித்திறத்தன. தமிழர்களின் பெருமையினைப் பறைசாற்றும் வகையில் இவ்விரண்டு நூல்களையும் எடுத்துரைப்பது தமிழர் மரபு. எனவே, இரண்டு நூல்களுக்கான ஒப்புமையே ஆய்வுக்குரிய பொருளாயின. ''தெய்வப்புலவர்'' திருவள்ளுவர் அருளிய திருக்குறள் சொற்களுக்கு, ''கவிச்சக்கரவர்த்தி'' கம்பரின் கம்பராமாயணம் பொருள்பகரும் நிலையில் இருப்பதனை அறிய விழைந்ததன் விளைவாகவே இக்கட்டுரை அமைகிறது.*

**கற்றதன் பயன் கடவுளைத் தொழுதல்**

*கல்வி (கல் + வி) என்னும் சொல் அகழ்ந்தெடுத்து அறிவித்தல் என்னும் பொருளைப் பகர்கிறது. உள்ளுக்குள் புதைந்திருக்கும் ஆற்றலை உணர்த்துவதே கல்வி. எனவே, இது உலகியலுக்கான பொருளையும் அருளியலுக்கான பொருளையும் கற்பிப்பது என உணர முடிகிறது. இதனை உணர்வுடையோரால் மட்டுமே உணரமுடியும். திருக்குறளும் கம்பராமாயணமும் விஞ்ஞான நோக்கிலும் மெய்ஞ்ஞான நோக்கிலும் ஆய்ந்தறிவதற்கான நூல்களே என்பதனை உணர்வுடையோர் உணர்வர். கற்றதன் பயன் கடவுளை உணர்தலே என்கிறார் தெய்வப்புலவர்.*

***கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழ அர் எனின் (திருக்குறள்-2)***

*என்னும் திருக்குறளின் வழி கல்வியின் பயன் கடவுளை அறிதலே எனத் தெளிவு படுத்தியுள்ளார் தெய்வப்புலவர். ''விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானத்தின் தொடக்கம்'' என்பதனையும் இத்திருக்குறளின்வழி உணரமுடிகிறது. இவ்வடிகளுள் கடவுளைக் குறிக்கும் ''வாலறிவன்'' என்னும் சொல்லுக்கான பொருளினை விரித்துரைக்கும் வகையில் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துப்பாடல் அமைந்துள்ளது.*

***உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்***
***நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா***
***அலகு இலா விளையாட்டு உடையார் அவர்***
***தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே (கம்பராமாயணம், கடவுள் வாழ்த்து)***

*என்னும் இப்பாடல் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என அனைத்தையும் செய்யக் கூடிய விஞ்ஞானப் பொருளாகக் கடவுள் விளங்குவதனையும், முடிவுறாத ; அளவிலாத விளையாட்டை செய்யும் மெய்ஞ்ஞானப் பொருளாகவும் விளங்குவதனையும் உணர்த்தியுள்ளார். இவ்விரு ஞானத்தையும் ஊட்டும் கடவுளுக்கு நாங்கள் அடைக்கலம் எனக் கம்பர் வேண்டுவதனைக் காணமுடிகிறது. இதன்வழி திருவள்ளுவர் போற்றும் ''வாலறிவன்'' என்னும் சொல்லுக்குப் பொருளாகக் கம்பரின் கடவுள்வாழ்த்து அமைந்துள்ளதனை உணரமுடிகிறது.*

**ஆள்வினையும் இராமனும்**

*வினையை ஆள்கின்ற தன்மையே ஆள்வினை. இது மானிடர் அனைவர்க்கும் தேவையான சொத்து என்பதனாலேயே ''ஆள்வினை உடைமை'' எனத் தெய்வப்புலவர் குறிப்பிடுகிறார். எளிய மனிதர்களுக்கு ''ஊழ்'' என்னும் விதியினை வெல்லுதல் அரிதான செயலாகிறது. ஆனால் ஊக்கமுடையார்க்கு ஊழ்வினை எளிதாவதனை*

***ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்***
***தாழாது உஞற்று பவர் (திருக்குறள்:620)***

*என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றன. ஊழ்வினையைக் கண்டு அஞ்சியோடும் மனிதர்களினின்று ஊக்கமுடையார் மாறுபடுகின்றனர். ஏனெனில் அவர்களைக் கண்டு ஊழ்வினையே அஞ்சியோடும் எனத் தெளிவுறுத்துகிறார் தெய்வப்புலவர். மனிதர்களுக்குத் துன்பம்வரும்போது கீழ்நிலைக்குச் சென்றுவிடுவார். ஆனால் ஊக்கமுடையார் அத்தகைய சூழலிலும், சங்கு சுட்டாலும் வெண்மை தருவதுபோன்றும், சந்தனம் அரைத்தாலும் நறுமணம் குன்றாது இருத்தல் போலும் தன்னிலை மாறாது இருப்பர். அவ்வாறு இராமன் மானுடப் பிறப்பெடுத்து வாழ்ந்ததனை*

***தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவர் அன்றே***
***மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ***
***ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி***
***வேறு உள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே! (கம்பராமாயணம்:3804)***

*என்னும் அடிகளில் கம்பர் உணர்த்திவிடுகிறார். அரச பதவி, மனைவி பிரிவு, வனவாசம், போர் எனத்துன்பங்கள் தொடர்ந்தபோதும் தன்னிலை மாறாது ஊக்கமுடன் வென்றதனை கம்பர் சுட்டுகிறார். எனவே, தெய்வங்களுக்கும், தேவர்களுக்கும் மேலானவனாக இராமனின் மானிடப்பிறவி அமைந்துவிட்டதனைப் புலப்படுத்தியுள்ளார் கம்பர்.*

**பிறன்இல் விழையாமையும் இராவணனும்**

*ஆண்மைக்குப் பெருமைசேர்க்கும் பேராண்மை என்பது பிறன்மனை நோக்காதிருத்தலே என்பதனைப் புலப்படுத்துகிறார் தெய்வப்புலவர். மனைவியைத் தவிர அனைத்துப் பெண்களையும் தாயாக நோக்கும் பண்பினை இங்கு உணர்த்துகிறார்.*

***எனைத்துணையர் ஆயினும் என்ஆம் தினைத்துணையும்***
***தேரான் பிறன்இல் புகல் (திருக்குறள் :144)***

*என்னும் திருக்குறள் பிறன்மனை நோக்கும் இழிவினைப் புலப்படுத்துகிறது. ''பிறன் இல்புகல்'' என்னும் சிறுமை எத்தகைய உயர்பெருமையினையும் ஒன்றுமில்லாததாக்கிவிடும் எனத் திருக்குறள் கூறுகிறது. இத்திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாகவே இராவணனைக் கம்பர் படைத்துள்ளதாகக் காணமுடிகிறது.*

*இரவு வண்ணனாகிய இராவணன் உடலால் வலிமையுடையவனாகவும் உள்ளத்தால் வலிமை குன்றியனாகவும் இருந்தான். இதனை, சீதை அழகு குறித்து தன்தங்கை சூர்ப்பனகை சொல்கேட்டு இராவணன் மயங்கியதன்வழி புலனாகிறது.*

***வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்***
***நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்***
***தார் அணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்***
***வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே மீண்டு போனான் (கம்பராமாயணம்: 7272)***

*என்னும் பாடல் யானைகளின் தந்தங்கள் துளைத்த மார்பினையும், மலையினைத் தாங்கிய தோள்களையும், சாமவேதத்தை நாரதற்கே உரைத்த நாவினையும், பத்து மணிமுடிகளைத் தாங்கிய பத்துத் தலைகளையும் உடைய பெருமையுடைய இராவணன், பிறன்மனைவிழைந்த காரணத்தால் சிவபெருமான் கொடுத்த வாளை மட்டுமின்றி உடன்பிறந்த வீரத்தையும் இழந்து வெறுங்கையோடு போனான் எனப் பாடியுள்ளார்.*

**கற்பும் சீதையும்**

*கற்பெனப்படுவது சொல்மாறாமை அல்லது உறுதியானகொள்கை என்றே சுட்டப்படுகிறது. சொல்லும் செயலும் வேறுபடாத வகையில் இல்லறம் நடத்துவது பெருமைக்குரியது. ஆசை என்னும் மாயையானது மனத்தை மாற்றும் வல்லமை உடையது. எனவே, எந்நிலையிலும் மயங்காமல் இல்லறத்தில் இணைந்துவாழும் பெருமையுடைய மனநலம் கொண்டவரே சிறப்புடையவராவர். ஒழுக்கம்தவறாத கற்பே பெண்ணிற்கு பெருமைசேர்ப்பதனை*

***பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎன்னும்***
***திண்மை உண்டாகப் பெறின் (திருக்குறள் - 54)***

*என்னும் அடிகளில் தெய்வப்புலவர் உணர்த்திவிடுகிறார். சொல் திறம்பாமல் வாழும் அருமை பெண்ணிற்கு மட்டுமின்றி ஆணுக்கும் உரியது. இதனை விரித்துரைக்கும் வகையில் இராமனின் சொல்திறம்பாதபண்பினை, சீதை நினைவுறுத்தும் பாடலின்வழிப் புலப்படுத்துகிறார் கம்பர்.*

***வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்***
***இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்***
***சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்***
***தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய் (கம்பராமாயணம் - 5378)***

*என்னும் இப்பாடல், ஒன்றாக உடனுறைந்த நாளில் இராமன் கூறிய உறுதிமொழியினை சீதை அனுமனுக்குக்கூறுகிறாள். அதனையே இராமனிடம்கூறச்சொல்வதன்வழி அனுமன்தன்னையே கண்டான் என்பதனையும் தெளிவிக்கிறாள். சீதை மட்டுமே அறிந்த இம்மறைமொழியை உரிய நேரத்தில் புலப்படுத்துவதன்வழி, சீதையின் நுண்மாண்நுழைபுலமும் கற்பின் உறுதியும் ஒருவாறு புலப்படுகிறது. சிந்தையாலும் பிறமாதரைத்தொடாத இராமனின் பேராண்மையினைப் போற்றும் மனைவியாகச் சீதை விளங்கியதனையும் உணர்ந்துகொள்ளமுடிகிறது.*

**பட்டடையும் கூனியும்**

*பட்டடை என்பது இரும்பினைத் தாங்கும் உலைக்களக் கருவி. அது இரும்பைத் தாங்குவதுபோல்தாங்கி அதனைஅடித்துவளைக்கத் துணைசெய்யும். அவ்வாறு தீயோர் உறவு உடன்தாங்குவதுபோல்நின்றே தீங்குசெய்யும். இதனை ''கூடாநட்பு'' என்னும் அதிகாரத்தில்*

***சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை***
***நேரா நிரந்தவர் நட்பு (திருக்குறள் - 821)***

*என்னும் திருக்குறளின்வழிப் புலப்படுத்துகிறார் தெய்வப்புலவர். இத்திருக்குறளுக்குரிய பொருளாக, கைகேயின் உடனிருந்தே தீங்குசெய்யும் கூனியின் பண்பு அமைகிறது. இராமனுக்கு முடிசூட்டு விழா ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதனைக் கேட்டு மகிழ்கிறாள் கைகேயி. கைகேயின் நல்லெண்ணத்தை சீரழிக்கும் வகையில், நன்மை கூறுவதுபோல் வஞ்சத்தை ஊட்டுகிறாள்.*

***ஆழ்ந்த பேரன்பினாள் அனைய கூறலும்***
***சூழ்ந்த தீவினை நிகர் கூனி சொல்லுவாள்***
***''வீழ்ந்தது நின்நலம் திருவும் வீழ்ந்தது***
***வாழ்ந்தனள் கோசலை மதியினால்'' என்றாள் (கம்பராமாயணம் - 1454)***

*என்னும் அடிகளில், உன்னுடைய பெருமை வீழும். கோசலையின் பெருமை வாழும் என*

*கைகேயியிடம் கூனி உரைக்கிறாள். அன்பை வன்பாக மாற்றும் கூனியின் வஞ்சத்தை இங்கு காணமுடிகிறது.*

**சொல்வன்மையும் அனுமனும்**

*ஒரு சொல்லுக்கு மாற்றாக மற்றொருசொல் இடம்பெற்றிருப்பின் நன்றாக இருந்திருக்கும் எனக் கேட்போர் எண்ணுதற்கு இடமின்றிப் பேசுவதே சொல்வன்மையாகும். சொல்வதைக் கேட்கும் விருப்பமுடையார்க்கு மட்டுமின்றி கேட்க விரும்பாதவரும் கேட்கவேண்டும் என எண்ணும்வகையில் பேசுதல் சிறப்புடைய பேச்சாகும் என்கிறார் தெய்வப்புலவர்.*

***கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்***
***வேட்ப மொழிவதாம் சொல் (திருக்குறள் - 643)***

*என்னும் திருக்குறளுக்குப் பொருளாகக் கம்பராமாயணத்தில் அனுமன் பாத்திரம் இடம்பெற்றுள்ளதனைக் காணமுடிகிறது. இலங்கையிலிருந்து மீண்ட அனுமன்,*

***கண்டனென் கற்பினுக்கு அணியை, கண்களால்***
***தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்***
***அண்டர்நாயக! இனி, துறத்தி, ஐயமும்***
***பண்டுஉள துயரும்' என்று, அனுமன் பன்னுவான் (கம்பராமாயணம் - 6031)***

*என இராமனைக் கண்டவுடன் கூறிவிடுகிறான். சீதையைக் கண்டானா? இல்லையா? என்னும் இராமனின் ஐயத்தை நீக்கும் வகையில் அனுமன், ''கண்டேன்'' எனமுதலில் கூறி, பின் சீதையின் நலத்தையும், கண்களால்கண்ட பிரிவுத்துன்பத்தையும் வெளிப்படுத்துகிறான். அகத்தின் அழகை முகம் காட்டிவிடும் நுட்பத்தனை அனுமனின் அருஞ்சொல் படம்பிடித்துக் காட்டிவிடுவதனைக் காணமுடிகிறது.*

**இன்னாசெய்யாமையும் கும்பகர்ணனும்**

*துன்பத்தை விளைவிக்காத ஒருவர்க்கு அவருடைய பகைவர் துன்பம் விளைவிப்பாராயின், அத்தகைய பகைவர்க்கும் தீங்கு செய்தல் கூடாது. மனப்பக்குவமின்றித் துன்பம்செய்தால், அச்செயலால், அழியாத துன்பத்தை எதிர்கொள்ளநேரிடும் என்கிறார் தெய்வப்புலவர்.*

***செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்***
***உய்யா விழுமந் தரும் (திருக்குறள் - 313)***

*என்னும் இத்திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக கும்பகர்ணனைக் காணமுடிகிறது. தான் எத்தவறும் செய்யாதபோதும் அண்ணனுக்காக இராமனை எதிர்கொள்ளத்துணிகிறான். செஞ்சோற்றுக்கடன் தீர்க்க, தமையனுக்காக உயிர்கொடுத்து, பழிக்கு ஆளாகிறான். இதனை,*

***நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்***
***போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது, அங்குப்போகேன்***
***தார்க்கோல மேனிமைந்த! என் துயர் தவிர்த்தி ஆகின்,***
***கார்க்கோல மேனியானைக் கூடுதி, கடிதின் ஏகி (கம்பராமாயணம் -7426)***

*என்னும் பாடல் தெளிவுறுத்துகிறது. பழி, பாவத்தைக்காட்டிலும் செஞ்சோற்றுக்கடன் தீர்த்தலேகடமை எனத்தவறாக எண்ணிய கும்பகர்ணனின் நிலையினைக் கம்பர் எடுத்துக்காட்டியுள்ளார். பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி எவ்வுயிர்க்கும் எந்நிலையிலும்*

*எவ்வகையிலும் கேடு நிகழாது வாழ்வதே மானிட வாழ்விற்குப் பெருமை தரும் என்பதனைத் தெய்வப்புலவரும் கம்பரும் தெளிவுபடுத்தியுள்ளதனைக் காணமுடிகிறது.*

**நிறைவாக**

*தெய்வப்புலவர் திருவள்ளுவரின் காலத்திற்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் காலத்திற்கும் பன்னிரண்டு நூற்றாண்டு கால இடைவெளி அமைந்திருக்கிறது. இருப்பினும், படைப்பிலக்கிய நோக்கில் அறக்கொள்கையே இலக்கியக் கொள்கையாக வலியுறுத்தப்படுவதனைக் காணமுடிகிறது.*

*திருக்குறள் அற இலக்கியமாகவும், கம்பராமாயணம் சமய அற இலக்கியமாகவும் இயற்றப்பட்டுள்ளதனால் இரு நூல்களையும் ஒப்புநோக்கமுடிகிறது.*

*கம்பராமாயணத்தில் இடம்பெற்றிருக்கும் பாத்திரங்கள் அனைத்திற்கும் திருக்குறளை இலக்கணமாகக் கொண்டு விளக்க முடியும் என உணர்ந்துகொள்ளமுடிகிறது.*

*“எப்பொருளும் இதன்பால் உள்” என்னும் கூற்றுக்கு எடுத்துக்காட்டாகவே இவ்விரு இலக்கியங்களும் அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது.*

*இயற்றமிழானது இசையுடன் நாடகப்பாங்கில் அரங்கேறும் போது கற்றோர் கல்லாதார் என்னும் வேறுபாடின்றி உணர்ந்து கொள்வது எளிதாகிறது. அவ்வாறு திருக்குறளை கம்பராமாயணப் பாத்திரங்களோடு காட்சிப்படுத்துதன்வழி உணர்ந்துகொள்வது எளிதாகிறது எனத் தெளியமுடிகிறது.*

**முதல் நூல்**

1. *திருக்குறள்*
2. *கம்பராமாயணம்*
3. *தமிழ் இணையப் பல்கலைக்கழக மின்னூலகம்*

**சுருக்கவிளக்கம்**

1. *தெய்வப்புலவர் - தெய்வப்புலவர் திருவள்ளுவர்*